பஞ்சாயத்துக்களும் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டு மென்றால் முடியாத நிலை இருப்பதால் அவர்களுக்கு மானியம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொதுவாகவே, மக்களுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுகிறபோது நீண்டகாலக் கடன் அடிப்படையில் திட்டங்களைத் தீட்டுவதுதான் மக்களுக்கும் நல்லது. தமிழகத்தில் 4 கோடி 20 லட்சம் மக்க ளுக்குப் பரவலாக குடிதண்ணீர்த் திட்டங்களை நிறைவேற்ற அது வலிவு தரும்.

அரசாங்கத்தின் பொறுப்பில் நிறைவேற்றுவதாக இருந்தால் மக்களிடத்தில் வரி வசூலிக்க வேண்டிய வாய்ப்பு ஏற்படும். இந்தத் திட்டத்திற்கு ஆயுள் காப்பு கடனைத் தவிர, மாநில அரசு முதலில் 5.33 லட்சமும், பின்னர் 3.81 லட்சமும் கடனாகக் கொடுத்திருக் கிறது. 1971-72, 1972-73-ல் கடனாகக் கொடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு பொறுப்பேற்று நடத்தி வருகிறது.

இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு ஒரு சலுகை கொடுத்தால் பிறகு எல்லாப் பஞ்சாயத்துக்களுமே அந்த மாதிரி கேட்க முன் வரும். பஞ்சாயத்துக்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சுகாதாரத்திற்கு அடிப்படையான குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்ற அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அரசே இந்தக் காரியங்களை தர்மத்தைப் போன்று செய்வதாக இருந்தால் ஏதோ சில பகுதிகளுக்குக் கிடைக்கும். பல்வேறுவிதமான வாதத்திற்கும், வேதனைக்கும் உள்ளாகும்.

* 337 வினா—திரு. க. உசேர. எட்மண்ட் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் வட்டம், காயல்பட்டினம் பேரூராட்சி மன்றத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து கடன் நிதி வழங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு கிடைக்கப் பெற்றவுடன் திட்ட வேலைகள் துவக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1974 மார்ச் 9]

திரு. க. உரோ. எட்மண்ட்: இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டினார்கள். ஆயுள் காப்புக் கழகத்திலிருந்து எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆயுள் காப்புக் கழகம் இதற்கான கடனில் பெரும்பகுதியைத் தர இசைந்திருக்கிறது. அந்த அடிப்படையில் பல வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் காயல்பட்டினம் பேரூராட்சி மன்றம் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடனைத் திரும்பத் தரவில்லை என்ற அடிப்படையில் அதைப் பற்றிய முக்கியமான குறிப்பு பரிசிலனையில் இருக்கிறது. அரசுக்கும் அந்தப் பேரூராட்சிக்கும் இடையிலுள்ள அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டவுடன்—தீர்ந்திருக்குமென்று நம்புகிறேன்—வேலை துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

துலையாநத்தம் நலத்துறைப் பள்ளி

*** 338 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி வட்டம் துலையாநத்தம் கிராமத்திலுள்ள அரிசன நலப்பள்ளியை உயர் துவக்கப்பள்ளியாக மாற்ற வேண்டும் என ஊர் பொதுமக்கள் சார்பாக கோரிக்கை மனு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் துலையாநத்தம் அரிசன நல உயர் துவக்கப்பள்ளியை அரிசன நல உயர்நிலைப்பள்ளியாக மாற்றக் கோரி ஊர் பொது மக்கள் சார்பாக மனு பெறப்பட்டது. அது குறித்து அரிசன நல இயக்குநர் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த மனு எப்போது வந்தது? இவ்வளவு காலதாமதமாவதற்கு என்ன காரணம்? துவக்கப் பள்ளியை உயர் துவக்கப் பள்ளியாக மாற்ற ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா?